**செய்தி வெளியீடு எண் : 195** **நாள்: 31.01.2022**

**<u>செய்தி வெளியீடு</u>**

ஒன்றிய அரசால் ஜூலை 2017 முதல் சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் அமல்படுத்தப்பட்டு நடைமுறையிலுள்ளது. பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு நலத்திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்துவதில் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மூலம் பெறப்படும் வரி வசூலானது முக்கிய பங்கு வகிக்கிறது. வணிகவரித்துறையின் புலனாய்வு சார்ந்த நடவடிக்கைகளை வலுவாக்குவது, நுண்ணறிவு பிரிவுகள் மூலம் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மீதான தணிக்கை பணியினை திறம்பட மேற்கொள்வது போன்ற பல புதிய முயற்சிகள் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2. இதன்படி 03.01.2022 முதல் 16.01.2022 வரையில் முடிவடைந்த இரு வாரங்களில் தமிழ்நாட்டில் தணிக்கை மேற்கொள்ளப்பட்ட இனங்களின் எண்ணிக்கை 996 மற்றும் ரூ.24.50 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது.

**அரசு செயலாளர்**
**வணிகவரி மற்றும் பதிவுத் துறை**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**